O.S.50-2017

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.50/2017

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ரெங்கையா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரெங்கையா | வயது | : | 88/24 |
| தகப்பனார் பெயர் | : | மாரியப்பன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | பெருங்களூர் | தொழில் | : | விவசாயம் |

நாள்-05.02.2024

பி.வா.சா.1

**<u>4,5,7,8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் தற்போது பெருங்களூரில் வசித்து வருகிறேன்.

2. எனது தகப்பனார் பெயர் மாரியப்பன்.

3) எனது தகப்பனார் மாரியப்பனுக்கு, நான், பெரமன், கருப்பையா, சின்னாத்தாள், கேவிந்தம்மாள் ஆகியோர்கள் பிள்ளைகள் என்றால் சரிதான்.

4) என் சகோதரிகள் சின்னாத்தாள், கோவிந்தம்மாளுக்கு திருமணமாகி 45 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான்.

5) எனது சகோதரி சின்னாத்தாளின் மகள் தான் 1ம் வாதி மங்களம் என்றால் சரிதான்.

6) எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே 1985ம் வருடத்திலேயே எங்கள் குடும்பத்தில் பாகம் பிரித்துக்கொண்டோம். அந்த பாகப்பிரிவினையின்படி ஒவ்வொருத்தரும் எழுதிகொடுத்துள்ளோம். அதன்படி 1985ம் வருடத்திலிருந்து அவரவர் பாகத்தினை அனுபவித்து வருகிறோம்.

7) 5ம் பிரதிவாதி சியாமளா தேவி அவரது பெயரில் தனிப்பட்ட முறையில் சில சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார். அதே போல் 1ம் வாதியும் அவரது பெயரில் புதுக்கோட்டையில் வீடு வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

மு.மா.நீ,

8) பூர்வீக வீட்டில் 1ம் வாதி புதிதாக தார்சு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த தார்சு வீட்டிற்கு பின்னாடிதான் எனது ஓட்டுவீடு உள்ளது.

9) வீட்டிற்கு பாதைக்காகத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.